[6th August 1966

திரு. ஏ. கோ. பாலகிருஷ்ணன் : இப்போதுள்ள பயிற்சிப் பள்ளி ஆபத்தான கட்டடத்தில், பழைய கட்டடத்தில் இருக்கிறது. தற்போது அந்தப் பள்ளிக்கூடம் சவுக்குத் தோப்புக்குள் பாதுகாப்பு இல்லாத நிலையில் இருக்கிறது. இடம் காணாது ஷெட் போட்டு வைத்திருக்கிறார்கள். இப்போது அதற்காகக் கொடுக்கப்பட்ட 10 ஏக்கர் நிலம் ரோட்டின் மேல் இருக்கிறது. அந்தப் பத்து ஏக்கர் நிலத்திலே கட்டடம் கட்ட வழி செய்வார்களா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : தானமாகக் கொடுத்ததைப் பாராட்டுகிறேன். அதை ஏற்றுக் கொள்வதில் சிக்கல் இல்லை. தானம் கொடுத்தவர் தன்னுடைய பெயரை வைக்கவேண்டுமென்று சொல்லுகிறார். ஒரு ஸ்தாபனத்தைப் பொறுத்தவரை அதற்கு ஆகும் செலவில் பாதித் தொகையை ஒருவர் ஏற்றுக் கொண்டால் தான் அவருடைய பெயரை வைக்கலாம் என்ற கொள்கை அனுசரிக்கப்பட்டு வருகிறது. இதிலே, அந்த மாதிரிப் பாதித் தொகை அளவு வராது. டைரக்டர் ஆஃப் செகண்டரி எஜுகேஷன் பரிசிலனை செய்துகொண்டிருக்கிறார்.

திரு. ஏ. கோ. பாலகிருஷ்ணன் : தலைவர் அவர்களே, அவர் தன்னுடைய பெயரை வைக்கவேண்டுமென்று விரும்புவதாகச் சொன்னார்கள். அப்படி பெயர் வைக்கவேண்டாமென்று சொன்னால் எந்த முறையை வகுப்பார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : பெயர் வைக்க வேண்டாமென்று சொன்னால், 10 ஏக்கரோ, 5 ஏக்கரோ கொடுப்பதை ஏற்றுக் கொள்வார்கள். அதற்கு மேல் கட்டடம் கட்ட ஏற்பாடு செய்யவேண்டும். அதற்கு நிதி திரட்ட வேண்டும்.

ஆரம்ப ஆசிரியர்கள் சம்பளம்

*** 148 கேள்வி.—திரு. இரா. நாராயணன் :** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

ஆரம்ப ஆசிரியர்களுக்கு, அடிப்படைச் சம்பளம் ரூ. 120 ஆக நிர்ணயிக்கும் திட்டம் ஏதேனும் அரசாங்கத்தின் பரிசீலனையிலுள்ளதா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : No, Sir.

திரு. இரா. நாராயணன் : பண்டங்களின் விலைவாசி ஏறுவதால் ஆரம்பப் பள்ளி ஆசிரியர்களுக்கு அடிப்படைச் சம்பளம் போதாத நிலை இருக்கிறது. அவர்களுக்கு அதிகக் குழந்தைகளும் பிறந்துவிடுகின்றன. ஆகவே, அடிப்படைச் சம்பளத்தை உயர்த்த அரசாங்கம் முன் வருமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அடிப்படைச் சம்பளம் ஓரளவு உயர்த்தப்பட்டிருக்கிறது. விலைவாசி உயருவதற்கு ஏற்ற வகையில்

6th August 1966]

தவறுமல் ஆசிரியர்களுக்கு, ஸ்தல ஸ்தாபன ஆசிரியர்களுக்கு மட்டு மல்லாமல் தனிப்பட்ட பள்ளி ஆசிரியர்களுக்கும் அப்போதைக்கப் போது பஞ்சப்படி உயர்த்தப்பட்டு வருகிறது.

ஆதாரப் பயிற்சிப் பள்ளி மாணவர்களுக்கு உதவிப்பணம்

* *149 கேள்வி.—***திரு. ஆ. தங்கவேலு :** *கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—*

(அ) ஆசிரியர் பயிற்சிக்கு ஜூனியர் பேசிக் படிப்பவர்களுக்கு உதவித் தொகை கொடுப்பதை நிறுத்த சமீபத்தில் அரசாங்கம் உத்தரவிட்டது உண்மையா ?

(இ) ஆம் எனில், காரணமென்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) No.

(*b*) Does not arise.

திரு. ஆ. தங்கவேலு : *சென்ற ஆண்டு ஜூனியர் பேசிக் படிப்பவர்களுக்கு உதவித் தொகை நிறுத்தப்பட்டு, பிறகு கொடுக் கப்பட்டது. இந்த ஆண்டு அந்த உதவித் தொகை கொடுக்கப் படுமா ?*

கனம் திரு. எம். பக்தவத்சலம் : *ஹையர் கிரேடு டிரெய்னிங் எதுவரை இருக்கிறதோ அது வரை கொடுக்கப்படும்.*

திரு. வி. எஸ். எஸ். மணி : *செகண்டரி கிரேடு ஆசிரியர்கள் பயிற்சி பெறும் மாணவர்களுக்கு உதவித் தொகை 18 ரூபாய் கொடுக்கப்படுகிறது. ஆனால், கிராம சேவக் பயிற்சி பெறுபவர் களுக்கு 50 ரூபாய் கொடுக்கப்படுகிறது. இரண்டு பேரும் எஸ்.எஸ்.எல்.சி. தான். இந்த வித்தியாசத்திற்குக் காரணம் என்ன ?*

கனம் திரு. எம். பக்தவத்சலம் : *இது வேறு பயிற்சி, அது வேறு பயிற்சி. எந்தெந்தப் பயிற்சிக்கு எவ்வளவு பேர் வருகிறார்கள் என்பதையெல்லாம் பார்த்து உதவித் தொகை நிர்ணயிக்கப் படுகிறது.*

* 150 *Q.*—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether any representation was received from the students of the Basic Training School, Aralvoimozhi in Kanyakumari district regarding stoppage of stipend;

(*b*) if so, the reasons for stopping the stipend in the middle; and

(*c*) whether any decision has been taken to restore the grant of stipend?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Yes.

(*b*) The payment of stipend was not stopped.

(*c*) Does not arise.